திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கிராமப் புறங்களில் மருத்துவ வேலைகளைக் கவனிக்கவேண்டும் என்கிற ஒரு கண்டிஷனை வைத்து மருத்துவக் கல்லூரிக்கு அட்மிஷன் கொடுக்கும் முறையை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அட்மிஷன் செய்யும்போது அம்மாதிரி கண்டிஷன் ஒன்றும் இல்லை. ஹவுஸ் சர்ஜன்ஷிப் முடிந்ததற்கு பிற்பாடுதான் கம்பல்சரி சர்விஸ் பற்றிக் கவனிக்கவேண்டும்.

திருமதி. பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : இதுகாறும் ஒரு வருஷம் இன்டர்னிஷிப், ஒரு வருஷம் ஹவுஸ்-சர்ஜன்ஷிப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இரண்டுவருஷப் பயிற்சியை ஒரு வருஷமாகக் குறைத்து விடுவதனால், ஹவுஸ்சர்ஜன் பயிற்சியில் இரண்டு வருடத்திற்கும் சேர்த்துப் பயிற்சி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இன்டர்ன்ஷிப்பில் என்ன கற்றுக்கொடுக்கிறார்களோ, அது ஒரு வருஷத்தில் ஹவுஸ்-சர்ஜின் பயிற்சியின்போதே கற்றுக்கொடுக்கப்படுகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஹவுஸ்-சர்ஜன் பயிற்சியை முடிக்காமலேயே இராணுவ சேவைக்கு நமது மாநிலத்திலிருந்து டாக்டர்கள் போயிருக்கிறார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதுவரை அம்மாதிரி யாரும் 'ஆஃபர்' செய்யவில்லை.

Regional Workshops

* 384 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the **Minister for Works be pleased to state—**

(*a*) how many Regional Workshops are there under the Control of the Board of Revenue; and

(*b*) where are they located?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There are 3 Regional Workshops under the control of the Board of Revenue.

(*b*) They are located at Thanjavur, Salem and Madurai.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி ரிப்பேருக்கு அனுப்பப்படும் கார்கள் மாதக்கணக்கில் கிடக்கின்றன. போதுமான வசதிகளோடு ஷெட் கிடையாது. ரிப்பேருக்குப் போகும் கார்களுக்கு கெட்டுப்போகும் நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே, ஷெட்களை அதிகமாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பொதுவாக, அந்த ஒர்க்ஷாப்புக்கு வேண்டிய கட்டடங்கள் எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்பொழுது அமைந்திருக்கும் கட்டடங்கள் போதாது என்பதற்காக அவற்றையெல்லாம் விரிவுபடுத்தவேண்டும் என்கிற ஆலோசனையும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஒர்க்ஷாப்புக்குச் செல்லும் கார்கள் விரைவில் ரிப்பேர் செய்யப்பட்டு அனுப்பப்படுவதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதிசீக்கிரத்தில் கார்கள் ரிப்பேர் செய்யப்பட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஒவ்வொரு ரீஜினல் ஒர்க் ஷாப்பிலும் எத்தனை ஜீப்கள், கார்கள் ரிப்பேர் செய்யப்படவேண்டும். சர்விஸ் செய்யப்படவேண்டும் என்ற முறை இருக்கிறது. அதற்கு தகுந்த முறையில் அந்த ஒர்க்ஷாப்பில் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

27th March 1963]

திரு. கே. மூக்கையா வேர் : இம்மாதிரி ஓர்க்ஷாப்க்ளுக்குப் பக்கத்தில் ஐந்தாறு மைல் சுற்றளவில் வரும் கார்களுக்குப் பெட்ரோல் சப்ளை செய்யப்படுவது உண்மையா? அது சம்பந்தமாகச் சில கம்ப்ளெய்ன்ட்கள் வந்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. வெ. ராமையா : அந்த ஓர்க்ஷாப்பில் எண்ணெய் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடும் இருக்கிறது. பக்கத்திலிருக்கும் வண்டிகளுக்கெல்லாம் கொடுக்கிறார்கள். ஆனால், அது சம்பந்தமாக எந்த விதமான புகாரும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சிறிய சிறிய ரிப்பேர்களுக்குக் கூட ஜில்லா தலைநகரங்களிலுள்ள ஜீப்கள் சென்ட்ரல் ஓர்க்ஷாப்புக்கு வரவேண்டியிருக்கின்றன. அதனால் பெருத்த செலவு ஏற்படுகிறது. பெரிய ரிப்பேராக இருந்தால், சென்ட்ரல் ஓர்க்ஷாப்புகளிலும் சிறிய ரிப்பேராக இருந்தால் மாவட்டங்களிலுள்ள ரிஜிஸ்ட்டர்டு ஓர்க்ஷாப்களிலும் ரிப்பேர் செய்து கொள்ளலாம் என்று அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. வெ. ராமையா : சில அங்கீகரிக்கப்பட்ட, தனியார்த் துறையில் நடக்கும் ஓர்க்ஷாப்புக்கும் வண்டிகளை அனுப்பி ரிப்பேர் செய்து கொள்ளுவதற்கான அனுமதியை அரசாங்கம் கொடுத்திருக்கிறது.

Kist Remission

* 385 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal for the remission of kist in the flood affected villages in Tiruchirapalli and Thanjavur, in respect of lands submerged by sands?

THE HON. SRI V. RAMAIAH : Yes.

திரு. ஆ. கு. சுப்பையா : வெள்ளத்தினால் மண் மேடிட்டு அகற்றப் படாமலிருக்கும் நிலையில் கிஸ்தி கொடுக்க விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களைப் பொறுத்தவரையில் உடனடியாக கிஸ்தி வஜா செய்ய உத்தரவிடப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கிஸ்தி நிவாரணம் கொடுப்பதுதான் திட்டம். அதனால்தான், 'ஆம்' என்று முதல் கேள்விக்குப் பதிலளித்தேன்.

திரு. க. ர. நல்லசிவம் : கிஸ்தி நிவாரணம் கொடுத்தாலும், மண்ணை எடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா : பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் கடனுதவி செய்துகொண்டிருப்பது கனம் அங்கத்தினருக்கு நன்றாக தெரியும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தஞ்சை ஜில்லாவில் கிஸ்தி வஜா செய்யப்பட்ட கிராமங்கள் எவை என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. வெ. ராமையா : கிராமங்களின் பெயர்கள் என்னிடம் இல்லை. ஆனால், பாதிக்கப்பட்ட தாலுகாக்களும், விஸ்தீரணமும் சொல்ல முடியும். பாபநாசம் தாலுகாவில் பத்து ஏக்கரும், நன்னிலம் தாலுகாவில் 21·65 ஏக்கரும், தஞ்சாவூர் தாலுகாவில் 76 ஏக்கரும் பாதிக்கப் பட்டிருக்கின்றன.